சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 09.08.2023

SC.NO. 137/2023

PW 4 : திரு.யோகராஜ் (வயது 32 ) த/பெ. கண்ணன்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

( எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்)

<u>முதல் விசாரணை</u>

நான் முள்ளால் கிராமத்தில் காளியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன் . அ.சா.1,2,3 ஆகியோரை தெரியும் எனது சித்தப்பா குடும்பத்தை சேர்ந்தவர்கள் .ஆஜர் எதிரியை தெரியும். 13.06.2022 ம் தேதி எங்கள் ஊர் காளியம்மன் கோவில் திருவிழா ஆரம்பித்தது. தஞ்சாவூர் மாவட்டம் கொடிக்காலூரிலிருந்து எனது பெரியம்மா மகன் கார்த்திக் திருவிழாவிற்கு வந்திருந்தார் . 15.06.2022 ம் தேதி எனது சித்தப்பா பையன் ஹரிபிரசாத் (அ.சா.1) இரவு 9 மணி அளவில் எனக்கு போன் செய்து நானும் , விவேகானந்தம், கார்த்திக் ஆகியோர் முள்ளால் பஸ் ஸ்டாப்பில் உட்கார்ந்திருந்ததகாவும் அப்போது கார்த்திக் போன் பேசி கொண்டிருந்ததாகவும் அவரிடம் ஆஜர் எதிரி செல்போன் தருமாறு கேட்டதாகவும் , அதற்கு கார்த்திக் செல்போனை தரமுடியாது என்று மறுத்ததாகவும் , அதற்கு ஆஜர் எதிரி நான் யார் என்ன என்று உனக்கு தெரியுமா என்று சொல்லி தேவடியா மவனே என்று கெட்ட வார்த்தையால் திட்டி ஆஜர் எதிரி தனதுகையில் வைத்திருந்த கத்தியால்

கார்த்தியை அவரது உதட்டிலும் ,தாவாங்கட்டையிலும், மார்பிலும், விலா பகுதியிலும், ஆஜர் எதிரி குத்திவிட்டதாகவும் காயம் பட்ட கார்த்திக்கை நாங்கள் இலால்குடி அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்து செல்வதாகவும் கூறினார். அவர் கூறிய பிறகு நானும் உடனே புறப்பட்டு இலால்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் . காயம்பட்ட கார்த்திக்கை நான் தான் மருத்துவமனையில் அட்மிஷன் செய்தேன் . காயம்பட்டவர் யார் எந்த ஊர் எப்படி காயம் பட்டது என்றும் , தாக்கியவர் யார் என்றும் மருத்துவர் கேட்டார் . அவரை தாக்கியவர் யார் என்று தெரியவில்லை என்று சொன்னேன். பின்னிட்டு காயம்பட்ட கார்த்திக்கை மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அவருடன் அ.சா.1,2 சென்றார்கள். காயம்பட்ட கார்த்திக் தற்சயமம் உயிருடன் இல்லை . சுமார் 5 மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார்.இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காயம்பட்ட கார்த்திக் எனது உறவினர் என்றால் சரிதான் . சம்பவம் நடந்த அன்று எங்கள் ஊரில் திருவிழாவில் தான் நான் இருந்தேன் . சம்பவம் குறித்து எனது தம்பி ஹரிபிரசாத் சொல்லி எனக்கு தெரியும் . சம்பவம் எத்தனை மணிக்கு நடந்ததாக சொன்னார் என்றால் இரவு 9 மணிக்கு. எனக்கு 10 நிமிடம் கழித்து 9 1/4 மணிக்கு தகவல் சொன்னார்கள்.சம்பவம் நடந்த உடன் கார்த்திக்கை ஹரிபிரசாத்தும் விவேகானந்தனும் ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றார்கள். நானும் அதே நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு சென்று விட்டேன் . நான் தான் கார்த்திக்கை அட்மிட் செய்தேன் என்றால் சரிதான். யார் தாக்கியது என்பது அடையாளம் தெரியாத நபர் என்று தான் மருத்துவரிடம் நான் சொன்னேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தை கேள்விபடவில்லை என்றாலும் சம்பவமே

நடக்கவில்லை என்றாலும் , இந்த வழக்கில் எதிரி ஜெகனுக்கும் சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் நாங்கள் அனைவரும் உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

/signed/
யோகராஜ்

/signed/
திரு.S.விஜயகுமார், M.A., M.L.,
சார்பு நீதிபதி, இலால்குடி.